1771

**முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, கிண்டி, சென்னை–25, அவர்களின் செயல்முறை ஆணை**
**பிறப்பிப்பவர் – திரு.இரா. செல்வதுரை,பி.இ.,(ஹானர்ஸ்) எம்.இ.,**
**செயல்முறை ஆணை எண். 9152 / நிர்.3 (1) / 2024 , நாள்.27.10.2025**

செயற் பொறியாளர் க (ம) ப.(நெ) அலுவலகம் * திருப்பத்தூர், தி.மா. *
03 NOV 2025

| | |
|---|---|
| கோ.பொ (நெ) | |
| கோ.க. | |
| மு.வ.அ | |
| க.கா. | |

பொருள் : பணியமைப்பு – நெடுஞ்சாலைத் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தொகுதி – IIA பணி – உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள்– பணிவரன்முறை ஆணை வழங்குதல்.

பார்வை :
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3, கடிதம் எண். 1075 / பி.எஸ்.டி–எ2 / 2024 நாள் 05.07.2024, 02.08.2024, 20.08.2024, 04.10.2024, 09.10.2024 மற்றும் 24.10.2024.
2. முதன்மை இயக்குநர் (நெ), சென்னை செயல்முறை ஆணை எண். 9152 / நிர்.3(1) / 2024, நாள்.14.08.2024, 06.09.2024, 09.09.2024, 12.09.2024, 23.09.2024, 29.10.2024, 19.11.2024 (ம) 20.12.2024.

---

பார்வை 1–இல் காணும் தேர்வாணையக் கடிதங்களின்படி உதவியாளர் பதவிக்கு (தொகுதி – IIA) தெரிவு செய்யப்பட்டு, இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தம் 186 நபர்களுக்கு பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணைகளில் உதவியாளராக பணி நியமனம் செய்து பணியமர்வு ஆணை வழங்கப்பட்டது.

தற்போது, பார்வை 2–ல் காணும் செயல்முறை ஆணைகளின் மூலம் உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டவர்களில், இச்செயல்முறை ஆணையின் பிற்சேர்க்கையில் இடம் பெற்றுள்ள 128 உதவியாளர்களுக்கு அவரவர் பெயருக்கெதிரே அவர்கள் உதவியாளர்களாக பணியேற்பு செய்த நாள் முதல் (கலம் 5–ல் குறிப்பிட்டுள்ள நாள்) தேர்வாணையக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கீழ்கண்ட நிபந்தனைகளை உள்ளடக்கி பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

"The regularization is subject to the outcome of W.A (MD) No.181 of 2023 & C.M.P (MD) No.2247 of 2023 pending before the Hon'ble Madurai Bench of Madras High Court and other cases if any pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of Madras High Court relating to this recruitment".

மேலும், தற்போது வழங்கப்படும் பணி வரன்முறை உத்தரவின் அடிப்படையில் உதவியாளர் பதவியின் முதுநிலையில் எவ்வித முன்னுரிமையும் கோர இயலாது எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

பணி வரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியாக மூன்றாண்டுக்கால பணிக் காலத்தில் இரண்டாண்டுக்காலம் தகுதிகாண் பருவமாக வைக்கப்படும் எனவும், தகுதிகாண் பருவம் நிறைவு செய்வதற்கு அரசாணை (நிலை) எண். 55 / பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தம் (B) துறை / நாள்.17.4.2012ன்படி நெடுஞ்சாலைத்துறையில் நேரடி நியமனம் மூலம் உதவியாளர் பணி நியமனம் செய்யப்படும் தனியர்கள் கீழ்கண்ட தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

Scanned with OKEN Scanner

- பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் 2 மாத கால அடிப்படைப் பயிற்சியை நிறைவு செய்து தேர்ச்சி பெறவேண்டும்.
- நெடுஞ்சாலைத்துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கான கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.
- தமிழ்நாடு அலுவலக நடைமுறைநூல் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.

மேலும், இச்செயல்முறை ஆணையின் பிற்சேர்க்கையில் தேர்வாணைய வரிசை எண்.6, 76 (ம) 163–இல் இடம் பெற்றுள்ள உதவியாளர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 21 (1)–இன்படி அவர்கள் பணியில் சேர்ந்த (கலம்–5) தேதியிலிருந்து 2 ஆண்டுகள் தகுதிகாண் பருவக் காலத்திற்குள் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ் மொழித் தேர்வில் (Tamil language test) தேர்ச்சி பெற வேண்டும். அவ்வாறு மேற்படி தேர்வில் தேர்ச்சி பெறவில்லையெனில் பணி நீக்கம் செய்யப்படுவார் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பிற்சேர்க்கை

இரா.செல்வதுரை
முதன்மை இயக்குநர்
நெடுஞ்சாலை

பெறுநர்
பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ள தனியர்கள்
சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்கள் (நெ),
கண்காணிப்பு பொறியாளர்கள் (நெ), கோட்டப் பொறியாளர்கள் (நெ) மூலமாக

நகல் –
அனைத்து தலைமைப் பொறியாளர்கள் (நெ)
சம்பந்தப்பட்ட கண்காணிப்புப் பொறியாளர்கள் (நெ)
மற்றும் கோட்டப் பொறியாளர்கள் (நெ)

//உண்மை நகல் / உத்தரவின்படி /அனுப்பப்படுகிறது//

27.10.2025
கண்காணிப்பாளர்

குறிப்பு – இச்செயல்முறை ஆணையின் பிற்சேர்க்கையில் இடம் பெற்றுள்ள உதவியாளர்களின் கல்வித் தகுதி சான்றிதழ் (பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு மற்றும் பட்டப்படிப்பு) மற்றும் மாற்றுச் சான்றிதழ் ஆகியவற்றின் உண்மைத் தன்மையை அரசுத் தேர்வுகள் இயக்ககம், சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகம் மற்றும் கல்வி நிறுவனங்களிடமிருந்து பெற்று, தனியர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவற்றில் ஏதேனும் முரண்பாடு இருப்பின் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Scanned with OKEN Scanner